TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093655

1. District : விழுப்புரம் மாவட்டம் | PS: ஊ.த.க பிரிவு காவல்நிலையம் | Year: 2020 ஆண்டு | FIR No.: 07/2020/AC/VPM மு.த.அ. எண் | Date: 8.12.2020 நாள்

2. (i) Act சட்டம்: U/s 7(a) Prevention of | Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Corruption Amendment | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Act - 2018 | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 03.12.2020
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.12.2020 | Time : நேரம் 17.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 07.12.2020 | Time : நேரம் 17.00 hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 30 கி.மீ மேற்கு,
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி வட்டாட்சியர் அலுவலகம், கண்டாச்சிபுரம்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : | District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. மூர்த்தி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அர்ச்சுனன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் இந்தியர் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம் | (g) Address : முகவரி எண் 3/102, மாரியம்மன் கோவில் தெரு, அந்தகாடு கிராமம் & அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. க. நாகவேந்திரன், குறுவட்ட சர்வேயர், முகையூர், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   வாதியால் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Submitted: On 07.12.2020 at about 17.00 hrs, while I was in my office, one Tr.A.Murthi, S/o Arjunan residing at Arcod Village & post, Kandachipuram Taluk, Viluppuram District approached my detachment office and lodged a computer typed complaint which read as follows:- அனுப்புநர், A.மூர்த்தி, த/பெ.அர்ச்சுணன், நெ 3/102, மாரியம்மன் கோயில் தெரு, ஆற்காடு கிராமம் & அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். பெறுநர் உயர் திரு.காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, விழுப்புரம். ஐயா,நான் ஆற்காடு கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். M.Sc., B.Ed படித்துள்ளேன். தற்போது விவசாயம் செய்து வருகிறேன். கண்டாச்சிபுரம் வட்டத்தில் உள்ள அருளவாடி கிராமத்தில் எனது உடன் பிறந்த சகோதரி தெய்வசிகாமணி மனைவி லதா மற்றும் எனது தாய்மாமன் ஆதிமூலம் மகள் அலமேலு அவரது கணவர் நாராயணசாமி ஆகியோர் வசித்து வருகிறார்கள். எனது சகோதரி லதா என்பவர் அவரது மைனர் குமாரர்களான அரவிந்த் மற்றும் ஹரிஷ் ஆகியோர் பெயரில் கடந்த 6.7.2006ந்தேதி அருளவாடி கிராமத்தைச் சேர்ந்த மகாலிங்கம் என்வரிடமிருந்து ஆவண எண் 1605/2006ன்படி அருளவாடி கிராம சர்வே எண் 72/4Aல் 0.20 செண்ட் நிலம் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார். எனது தாய்மாமன் மகள் அலமேலு என்பவர் தனது குமாரர்களான தவசீலன் மற்றும் குணசீலன் ஆகியோர் பெயரில் அருளவாடி கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் என்பவரிடம் இருந்து ஆவண எண் 2652/2015ன்படி அருளவாடி கிராம சர்வே எண் 72/11A ல் 0.09 செண்ட் மனையுடன் வீடு கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார். அலுமேலு கணவர் நாராயணசாமி என்பவர் அருளவாடி கிராமத்தைச் சேர்ந்த அரிபால் என்பவரிடம் இருந்து ஆவண

(Continued in separate sheet)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the investigation / Refused investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
08.12.2020 at 10.00hrs

Name: பெயர் K. YUVARAJ
Rank: நிலை .................... No. எண் ..........
Deputy Supdt. of Police,
Vigilance and Anti-Corruption,
Villupuram.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

எண் 1311/2013ன்படி அருளவாடி கிராம சர்வே எண் 60/6B ல் 0.50 செண்ட் நிலம் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார். மேற்படி நபர்கள் எழுதபடிக்க தெரியாதவர்கள் என்பதால் அவர்கள் அவரவர் கிரையம் பெற்ற சொத்துக்களுக்கு உட்பிரிவு செய்து பட்டாமாற்றம் செய்ய உதவிடுமாறு என்னிடம் கேட்டுக்கொண்டனர். நான் அவர்களுக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவர்களுக்கு உதவி செய்ய சம்மதித்து எனது சகோதரி லதா என்பவருக்கும், எனது தாய்மாமன் மகள் அலமேலு என்பவருக்கும் கடந்த 01.07.2020 ந்தேதி அவர்களது நிலத்திற்கு உட்பிரிவு செய்து பட்டாமாற்றம் செய்ய ஆன்லைனில் மனு சமர்பித்தேன். அதுபோன்று நாராயணசாமி என்பவருக்கு கடந்த 26.06.2020 ந்தேதி ஆன்லைனில் மனு சமர்பித்தேன். அதற்குண்டான அரசு கட்டணத்தை மூன்றுபேருக்கும் கடநத் 3.7.2020 ந்தேதி சலான் மூலம் SBI திருக்கோவிலூர் வங்கி மூலம் அரசு கணக்கில் செலுத்தினேன். அதன் பிறகு நான் மேற்படி பட்டாமாற்றம் மனு சம்மந்தமாக கண்டாச்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் கேட்டபோது அவர்கள் உங்கள் சொத்து உட்பிரிவு செய்ய வேண்டியுள்ளதால் முகையூர் குறுவட்ட சர்வேயர் க.ராகவேந்திரன் என்பவரை பார்க்குமாறு கூறினார்கள். அதன்படி நான் அவரை சென்று பார்த்து ஆன்லைனில் பதிவு செய்த ஆவணங்கள் மற்றும் அரசுக்கு செலுத்திய சலான் நகல்களை அவரிடம் கொடுத்தேன். அதன் பிறகு பலமுறை அவரை சென்று பார்த்து பட்டாமற்றம் செய்வது சம்மந்தமாக இடத்தை அளக்க வருமாறு அவரிடம் கேட்டபோது இன்று வருகிறேன் நாளை வருகிறேன் என்று சுமார் ஐந்து மாதமாக அலைகழித்தார். அதன் பின்பு கடந்த 03.12.2020 ந்தேதி அவரிடம் சென்று மேற்படி பட்டாமனு சம்மந்தமாக கேட்டபோது அவர் ஒவ்வொரு நபருக்கும் தலா ரூபாய் 2,500 வீதம் ரூ.7,500/- கொடுத்தால்தான் இடத்தை அளந்து பட்டாமாற்றம் செய்ய பரிந்துரை செய்வேன் இல்லையென்றால் உனது மனுவை ரத்து செய்துவிடுவேன் என்று கூறிவிட்டார். நான் பணத்தை தயார் செய்துகொண்டு வருவதாக கூறிவிட்டு வீட்டிற்கு வந்து எனது அக்கா லதா மற்றும் அலமேலு மற்றும் நாராயணசாமி அவர்களிடம் சர்வேயர் லஞ்சமாக ரூபாய் 7,500/- கேட்பதை தெரிவித்தபோது அவர்கள் லஞ்சம் கொடுத்து பட்டாமாற்றம் செய்ய விரும்பாமல் சர்வேயர் மீது லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுக்கலாம் என என்னிடம் கூறி எங்கள் சார்பாக நீங்களே லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுங்கள் என கூறினார்கள். அதற்கு நான் புகார் கொடுக்க சம்மதித்து இன்று 7.12.2020ந்தேதி புகார் மனு தயார் செய்தேன். பட்டாமாற்றம் செய்ய ரூ.7,500/- லஞ்சமாக கேட்கும் முகையூர் குறுவட்ட சர்வேயர் திரு.க.ராகவேந்திரன் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.தங்கள் உண்மையுள்ள, ஒப்பம் (A.மூர்த்தி) நாள்: 07.12.2020 இடம்:விழுப்புரம்

Sir,

Received the above computer typed complaint on 07.12.2020 at about 17.00 hrs. The genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case

in Viluppuram Vigilance and Anti-Corruption Cr.No.7/2020/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 09.00 hrs today on 8.12.2020 and took up for Investigation.sd xxxxxx on 8.12.2020 (K.Yuvaraj) Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Viluppuram.

The original FIR along with a the original computer typed complaint in a sealed cover are sent to the Special Judge for cases under The Prevention of Corruption Act, Viluppuram and a ccpy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

(K.Yuvaraj))
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Viluppuram.